




ISSN: 2582–5518

# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351








வெள்ளி ❖ ஜூலை. 21, 2023 புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 287 ❖ ரூ.10


மணிப்பூர் கொடூரம்- அரசு தவறினால், நாங்களே நடவடிக்கை எடுப்போம் உச்ச நீதிமன்றம்

# கொந்தளிப்பு

## உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான அமர்வு, விரைவாக நடவடிக்கை எடுக்க மத்திய, மாநில அரசுகளுக்கு வலியுறுத்தல்

**புதுடெல்லி, ஜூலை. 21-**
**மணிப்பூரில் பெண்களை நிர்வாணப்படுத்தி ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்ட கொடூர வன்முறைச் சம்பவத்துக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள உச்ச நீதிமன்றம், "அரசு உரிய நடவடிக்கை எடுக்கத் தவறினால், நாங்களே நடவடிக்கை எடுப்போம்" என்று கொந்தளிப்புடன் தெரிவித்துள்ளது.**



உச்சநீதிமன்றதலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான அமர்வு, மணிப்பூர் வீடியோ தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுக்கும்படி மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தியதுடன், இந்தச் சம்பவம் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து உச்ச நீதிமன்றத்துக்கு தெரிவிக்க வேண்டும் என்று கூறியுள்ளது. இந்தச் சம்பவம் குறித்து கண்டனம் தெரிவித்துள்ள தலைமை நீதிபதி, "புதன்கிழமை பகிரப்பட்ட வீடியோவால் நாங்கள் மிகவும் தொந்தரவுக்குள்ளாகி உள்ளோம். இந்தச் சம்பவம் மிகவும் கவலையளிக்கும் ஒன்று. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டிய நேரம்; நடவடிக்கை எடுங்கள்.

விரோதத்தை தீர்த்துக்கொள்ள பெண்களை வன்முறையின் கருவியாக பயன்படுத்தப்படுவது அரசியலமைப்பு ஜனநாயகத்தால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாத மனித உரிமை மீறல். அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், நாங்கள் எடுப்போம். இதுபோன்ற வன்முறையில் ஈடுபடுபவர்கள் மீது வழக்குப் பதிந்து அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து நீதிமன்றத்துக்கு தெரியப்படுத்துவது அவசியம் என்று நாங்கள் கருதுகிறோம்" என்று உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தெரிவித்தார்.

இந்த வன்முறைச் சம்பவம் குறித்து மத்திய அரசு மற்றும் என்.பிரேன் சிங் தலைமையிலான மாநில அரசிடமிருந்தும் அறிக்கை கேட்டுள்ள உச்ச நீதிமன்றம், வழக்கை ஜூலை 28-ம் தேதி விசாரணைக்கு எடுத்துக்கொள்வதாக தெரிவித்துள்ளது.

இதனிடையே, மணிப்பூர் மாநில முதல்வர் பிரேன் சிங்கை வியாழக்கிழமை தொலைப்பேசியில் அழைத்துப்பேசிய மத்திய உள்துறைஅமைச்சர் அமித் ஷா, இந்தச் சம்வத்தில் தொடர்புடைய அனைவரின் மீதும் சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளாதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மணிப்பூரில் இரண்டு மாதங்களுக்கு மேலாக கலவரம் நடந்து வரும் நிலையில், வெளியான கொடூர சம்பவத்தின் வீடியோவுக்குப் பின்னர் முதல் முறையாகபிரதமர் மோடி பேசுகையில், "எனது இதயம் வலியால் நிரம்பியுள்ளது. இந்தச் சம்பவம் எந்த ஒரு நாகரிக சமூகத்துக்கான அவமானம். மணிப்பூரின் மகள்களுக்கு நடந்தது மன்னிக்க முடியாதது" என்று கண்டனம் தெரிவித்துள்ளார்.

"குற்றவாளிகளுக்கு எதிராகமரண தண்டனை கிடைக்கும் வகையில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி கூறுகிறேன். இதுபோன்றகொடூரமான செயல்களுக்கு நமது சமூகத்தில் இடம் இல்லை என்பதை புரிந்து கொள்ளவேண்டும்"என்று மாநில முதல்வர் பிரேன் சிங் தெரிவித்துள்ளார்.

மணிப்பூர் மாநிலத்தில் குகி பழங்குடியினத்தை சேர்ந்த இரண்டு பெண்களை மைதேயி சமூகத்தைச் சேர்ந்த ஆண்கள் கும்பல் ஒன்று சேர்ந்துநிர்வாணப்படுத்தி வீதியில் ஊர்வலமாக அழைத்து சென்ற கொடூரமான வீடியோ சமூக வலைதளங்களில் பகிரப்பட்டு தேசிய அளவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அந்த இரண்டு பெண்களில் ஒருவர் கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கும் ஆளாகியுள்ளார். இது தொடர்பாக பல்வேறு தரப்பினர் தங்கள் கண்டனங்களை தெரிவித்து வருகின்றனர்.

# மத்திய அரசின் ஆன்லைன் விளையாட்டுச் சட்டங்களின் குறிக்கோளே வருவாய்தான் அமைச்சர் ரகுபதி குற்றச்சாட்டு

**சென்னை, ஜூலை. 21-**
**"மத்திய அரசு தகவல் தொழில்நுட்பச் சட்டத்தில் சில திருத்தங்களையும், விதிகளையும் கொண்டு வந்துள்ளது. அதுகூட, இணையவழிசூதாட்டங்களை நடத்துகின்றவர்களை, பாதுகாக்கக்கூடிய ஒன்றாகத்தான் அமைந்திருக்கிறது. மத்திய அரசுக்கு வருவாயைக் கொண்டு வருவதை குறிக்கோளாக கொண்டுதான் அமைந்திருக்கிறது" என்று தமிழக சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கூறியுள்ளார்.**



சென்னை தலைமைச் செயலகத்தில் தமிழக சட்டத் துறை அமைச்சர் ரகுபதி நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியது: "ஆன்லனைன் தடை சட்டத்தில், தமிழக அரசு தனியாக எந்தச் சட்டமும் இயற்றி இருப்பதாக எனக்கு தெரியவில்லை. எனவே, சட்ட நிபுணர்கள் யாராவது அதை சுட்டிக்காட்டினால், அதைப் படித்துப் பார்த்து தெரிந்துகொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம். மத்திய அரசு தகவல் தொழில்நுட்பச் சட்டத்தில், சில திருத்தங்களையும், விதிகளையும் கொண்டு வந்துள்ளது. அதுகூட, இணையவழி சூதாட்டங்களை நடத்துகின்றவர்களை, பாதுகாக்கக்கூடிய ஒன்றாகத்தான் அமைந்திருக்கிறது. அரசுக்கு வருவாயைக் கொண்டு வருவதை குறிக்கோளாக கொண்டுதான் அமைந்திருக்கிறது.

தமிழகத்தில் ஆன்லைன் சூதாட்டத்தால், 40-க்கும் மேற்பட்டவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். பல குடும்பங்கள் நடுத்தெருவில் நிற்கின்றன. இவற்றை எல்லாம் கருத்தில் கொள்ளாமல், மத்திய அரசு சட்டம் கொண்டு வந்திருப்பதாக கூறி, அரசுக்கு வருவாய் ஈட்டும் வகையில்தான் விதிகளில் திருத்தங்களைக் கொண்டுவந்துள்ளனர். இது கண்டிக்கத்தகுந்தது என்பதற்காகவும், இந்த இரண்டு வாதங்களையும் மக்கள் மன்றத்துக்கு கொண்டு செல்ல வேண்டும். நீதிமன்ற தீர்ப்புக்கு எப்போது கட்டுப்படுபவர்கள் நாங்கள், நீதிக்கு தலைவணங்க கூடியவர்கள்.

இது மாநில சட்டப்பிரிவு, நமது அரசியலமைப்புச் சட்டத்தில் பொதுப் பட்டியல், மாநிலப் பட்டியல், மத்திய அரசு பட்டியல் என்று உள்ளது. மாநிலப் பட்டியலில் இருக்கக்கூடிய 34,1,6,33 என்ற விதிகளின்படிதான், ஆன்லைன் சூதாட்ட தடை சட்டத்தை தமிழக அரசு கொண்டு வந்துள்ளது. இது தொடர்பாக சட்டம் இயற்றப்பட்டுள்ளது. அதில் ஆன்லைன் சூதாட்டம், விளையாட்டுகள் இடம்பெற்றுள்ளன. மாநில அரசுக்கு உள்ள அதிகாரத்தின் அடிப்படையில்தான் ஆன்லைன் சூதாட்ட தடை சட்டம் இயற்றப்பட்டது" என்று அவர் கூறினார்.

முன்னதாக, தமிழகத்தில் ஆன்லைன் சூதாட்ட விளையாட்டுகளுக்கு தடை விதித்து தமிழக அரசு சட்டம் இயற்றியது. இதை எதிர்த்து ஆன்லைன் விளையாட்டு நிறுவனங்கள் சார்பில் உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டன. தலைமை நீதிபதி அமர்வில் நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு வந்தது. ஆன்லைன் விளையாட்டுகளை ஒழுங்குபடுத்தும் வகையில் மத்திய அரசு சட்டம் கொண்டு வந்துள்ளது. மத்திய அரசின் சட்டப்படி ஆன்லைன் விளையாட்டுகளில் சூதாட்டம் நடைபெறுவது தடுக்கப்படும் என்று வாதிடப்பட்டது.

குறிப்பாக, ஆன்லைன் சூதாட்ட விளையாட்டுகளை தடை செய்து சட்டம் இயற்ற தமிழக அரசுக்கு அதிகாரம் இல்லை என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் ஆன்லைன் விளையாட்டு நிறுவனங்கள் தரப்பில் வாதிடப்பட்டது.



புதுக்கோட்டை நகராட்சி அரசு உயர் துவக்கப்பள்ளியில், மாணவர்களின் கற்றல், கற்பித்தல் திறன்களையும், பள்ளியின் அடிப்படை வசதிகளையும், மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மஞ்சுளா, வட்டாட்சியர் விஜயலெட்சுமி, உதவிப் பொறியாளர் (நகராட்சி) கலியக்குமார் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

# "மணிப்பூரின் மகள்களுக்கு நடந்தது மன்னிக்க முடியாதது" பிரதமர் மோடி வேதனை

**புதுடெல்லி, ஜூலை. 21-**
**"எனது இதயம் வலியால் நிரம்பியுள்ளது. இந்தச் சம்பவம் எந்த ஒரு நாகரிக சமூகத்துக்கான அவமானம்" என்று மணிப்பூரில் பெண்களை வீதியில் நிர்வாணப்படுத்தி ஊர்வலமாக அழைத்துச் சென்ற கொடூரமான சம்பவம் குறித்து பிரதமர் மோடி வேதனை தெரிவித்துள்ளார்.**



இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்டுள்ள வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில், குகி பழங்குடியினத்தைச் சேர்ந்த இரண்டு பெண்களை, மைதேயி சமூகத்தைச் சேர்ந்த ஆண்கள் கும்பல் ஒன்று சேர்ந்து நிர்வாணப்படுத்தி வீதியில் ஊர்வலமாக அழைத்துச் சென்ற கொடூரமான வீடியோ சமூக வலைதளங்களில் பகிரப்பட்டு தேசிய அளவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பாதிக்கப்பட்ட மூன்றாவது பெண், அந்த வீடியோவில் இல்லை.

இந்தச் சம்பவம் குறித்து பிரதமர் மோடி தனது வேதனையையும் கோபத்தையும் வெளிப்படுத்தியுள்ளார். நேற்று நாடாளுமன்ற கூட்டுத் தொடர் தொடங்கும் முன்பாக பேசிய பிரதமர் மோடி, "மணிப்பூரில் நடந்துள்ள சம்பவம் நாகரிக சமூகத்துக்கான அவமானம். இதற்காக நாடு வெட்கப்படுகிறது. பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மீது நடவடிக்கை எடுக்க கடுமையான சட்டங்களை இயற்றும்படி நான் அனைத்து மாநில முதல்வர்களுக்கும் வேண்டுகோள் விடுக்கிறேன்.

இந்தச் சம்பவம் ராஜஸ்தான், சத்தீஸ்கர், மணிப்பூர் எங்கு வேண்டுமானாலும் நடந்திருக்கலாம், குற்றவாளிகள் நாட்டின் எந்தப் பகுதியில் இருந்தாலும் தப்பக் கூடாது. நான் நாட்டுக்கு உறுதியளிக்கிறேன். சட்டம் அதன் முழு பலத்துடன் தனது கடமையைச் செய்யும். மணிப்பூரின் மகள்களுக்கு நடந்தது மன்னிக்க முடியாதது" என்று பிரதமர் மோடி தெரிவித்தார்.

மணிப்பூரில் மைதேயி சமூகத்தினருக்கும் குகி சமூகத்தினருக்கும் இடையே கடந்த மே 3-ம் தேதி முதல் மோதல் ஏற்பட்டது. சுமார் 2 மாதங்களுக்கும் மேலாக நீடிக்கும் கலவரத்தில் இதுவரை 142 பேர் உயிரிழந்துள்ளனர். 500-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். 65,000 பேர் வீடுகளை இழந்து அகதிகளாகி உள்ளனர். இதுவரை 5,995 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த நிலையில் இந்தக் கலவரம் தொடர்பாக பிரதமர் மோடி தற்போதுதான் பேசியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், இந்த கொடுந்துயர சம்பவம் குறித்து ட்விட்டரில் மணிப்பூர் முதல்வர் என். பிரேன் சிங் கருத்து தெரிவித்துள்ளார். அவர் தனது பதிவில், " ஜீலை-19ம் தேதி {நேற்று} வெளியான வீடியோவில் மனிதாபிமானமற்ற முறையில், அவமரியாதை செய்யப்பட்ட இரண்டு பெண்களுக்காக எனது இதயம் கலங்குகிறது. இந்தச் சம்பவம் குறித்து தானாக முன்வந்து வழக்கு பதிவு செய்யப்பட்ட பின்னர், அதிரடி நடவடிக்கையில் இறங்கிய மணிப்பூர் போலீசார் இன்று காலையில் முதல் கைது நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

தற்போது முழுவீச்சில் விசாரணை நடந்து வருகிறது. குற்றவாளிகளுக்கு எதிராக மரண தண்டனை கிடைக்கும் வகையில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்என்றுஉறுதி கூறுகிறேன். இதுபோன்ற கொடூரமான செயல்களுக்கு நமது சமூகத்தில் இடம் இல்லை என்பதை புரிந்து கொள்ளவேண்டும்" என்றுதெரிவித்துள்ளார்.

நாட்டையே உலுக்கியுள்ள மணிப்பூர் பெண்கள் சம்பவம் கடந்த மே மாதம் 4-ம் தேதி அம்மாநிலத்தின் காங்போக்பி மாவட்டத்தில் உள்ள பைனோம் கிராமத்தில் நிகழ்ந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. இது தொடர்பாக மே 18-ம் தேதி அன்று காங்போக்பி காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், அந்த வீடியோ வெளியான பிறகுதான் அச்சம்பவமும், அதன் பின்புலமும் தற்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

மகளிர் உரிமைத்தொகை ரூபாய் ஆயிரத்தை பெற ஆயிரம் கண்டிஷன்கள்

# திமுக அரசை தாய்மார்கள் வீட்டுக்கு அனுப்புவார்கள் புதுக்கோட்டையில் விஜயபாஸ்கர் சாபம்

**புதுக்கோட்டை, ஜூலை. 21-**
**திமுக தேர்தல் அறிக்கை அறிவித்த மகளிர் உரிமைத்தொகை ரூபாய் ஆயிரத்தை பெற ஆயிரம் கண்டிஷன்கள் திமுக அரசு அறிவித்துள்ளதால் திமுகவை ஆட்சியில் இருந்து தாய்மார்கள் வீட்டுக்கு அனுப்புவார்கள் என புதுக்கோட்டையில் அதிமுக சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் சாபம் விட்டார்.**



கடந்த சில நாட்களாக அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரித்து காணப்படுகிறது. இதனிடையே, தமிழகத்தில் அத்தியாவசிய பொருட்களில் விலைவாசி உயர்வைக் கண்டித்து அதிமுக சார்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி, தமிழகம் முழுவதும் அதிமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகேயுள்ள ஜெயில் கார்னர் பகுதியில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்துக்கு அதிமுக மாவட்டச்செயலர்கள் டாக்டர் சி. விஜயபாஸ்கர் எம்எல்ஏ, பி.கே. வைரமுத்து ஆகியோர் தலைமை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் எம்எல்ஏ பேசியதாவது: கடந்த இரண்டு வருடங்களாக வழங்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்ட முதியோர் உதவித்தொகை மற்றும் ஊனமுற்றோர் உதவித் தொகையை மகளிர் உரிமைத் தொகை என்ற பெயரில் வழங்குகிறார்கள் அப்படி வழங்கும் இந்த உரிமை தொகைக்கு ரூ 1000 க்கு ஆயிரம் கண்டிசன்களை திமுக அரசு விதித்துள்ளது

இதில் பாதிக்கப்படும் தாய்மார்கள் திமுக அரசை விரைவில் வீட்டுக்கு அனுப்புவார்கள். அவர்கள் வழங்கும் ரூபாய் ஆயிரத்தில் வெங்காயம், தக்காளி கூட வாங்க முடியாது ஒரு நாள் செலவிற்கே ரூ 1000 போதாது. வேண்டுமானால் மாதம் தோறும் ஒரு குடும்பத்திற்கு ரூ 10,000 வழங்க வேண்டும். விலைவாசிகளை கட்டுப்படுத்த தவறிய திமுக அரசு தொடர்ந்து பால் விலை, மின்கட்டணம், சொத்து வரி, வீட்டு வரி, மதுபான கட்டணம் என அனைத்தையும் விலை உயர்வு செய்து வருகிறது.

தமிழக அமைச்சர்கள் மக்கள் நலனில் அக்கறை செலுத்தாமல் அதிகார துஷ்பிரயோகம் செய்து ஊழலில் ஈடுபட்டு செய்து சொத்து சேர்ப்பதிலும், நீதிமன்றம், அமலாக்கப் பிரிவு விசாரணைகளிலும் கவனம் செலுத்தி வருகின்றனர். தற்போது ஒரு அமைச்சர் டாஸ்மாக்கில் ஊழல் செய்து ஊழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இதனால் தமிழக மக்கள் உச்சகட்ட கோபத்தில் உள்ளனர் இலங்கையில் ராஜபக்ச அரசை தூக்கி எறிந்தது போல தமிழகத்தில் ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசை மக்கள் விரட்டி அடிப்பார்கள் என்றார்.


இதில், முன்னாள் எம்எல்ஏ- வீ.ஆர். கார்த்திக்தொண்டைமான், நகரச்செயலாளர்கள் எஸ்ஏஎஸ். சேட், க. பாஸ்கர், நிர்வாகிகள் வி.சி. ராமையா, வீ. ராமசாமி, பாசறை கருப்பையா, திருமயம் அழ. ராமு, பிஎல்ஆர். வேலு, அறந்தாங்கி ஆதிமோகன், பி.எம். பெரியசாமி, வேலாயுதம், குழந்தைவேலு, அன்னவாசல் சுப்பையா, சாம்பசிவம், முத்தமிழ்செல்வன்.

விராலிமலை ஏ.வி. ராஜேந்திரன், திருமூர்த்தி, பழனியாண்டி, ஆவுடையார்கோவில் கூத்தையா, சுப்பிரமணியன், மணமேல்குடி துரை மாணிக்கம், பவித்ராகண்ணன், கீரனூர் கருப்பையா, தமிழரசன், கூகூர் பாலு, கணேசன், கடையக்குடி திலகர், ஜீவாசெல்வராஜ் மற்றும் பொன்னமராவதி, கந்தர்வகோட்டை, குன்றாண்டார்கோவில், ஆலங்குடி உள்ளிட்ட மாவட்டத்தில் அனைத்து ஒன்றியங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொண்டனர்

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது காய்கறி, மளிகை பொருட்கள் விலை உயர்வை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க கோரி முழக்கமிட்டனர்.

# இன்று

# 21-7-23




நாவல் பழம் தினமும் சாப்பிடுவது இரத்தம் விருத்தி ஆக்கும்
சக வருடம் 1945 ஆஷாடம் 30

| சோபகிருது ஆடி 5 | JUL - FRI வெள்ளி | முஹர்ரம் 2 வளர்பிறை 202 / 163 | இராசிபலன் |
|---|---|---|---|

வளர். திரிதியை 00.11 (கா. 06.05) மகம் 19.09 (மா. 01.41) தியாஜ் 41.10 அகஸ் 31.17 மரண 19.09 மேல் சித்த. **சதுர்த்தி விரதம்**. மதுரை மீனாட்சி வெள்ளி அன்ன வாகனத்தில் வீதியுலா. படைவீடு ரேணுகாம்பாள் புறப்பாடு. மிலட்டூர் விநாயக பெருமான் புறப்பாடு.

| நல்லநேரம் | கௌ.ந.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|
| காலை : 9.15-10.15 | 12.15-1.15 | 10.30 | 07.30 | 03.00 |
| மாலை : 4.45-5.45 | 6.30-7.30 | 12.00 | 09.00 | 04.30 |

சூலம் : மேற்கு; பரிகாரம் : வெல்லம்; கடக லக்கனம் இருப்பு நா. 4 வி. 48; சந்திராஷ்டமம் திருவோணம் அவிட்டம்
கரணம் : 1.30-3; சூரிய உதயம் : 6.01
பதறாத காரியம் சிதறாது

| இராசிபலன் | |
|---|---|
| மேஷம் | நன்மை |
| ரிஷபம் | லாபம் |
| மிதுனம் | பெருமை |
| கடகம் | மேன்மை |
| சிம்மம் | உயர்வு |
| கன்னி | தெளிவு |
| துலாம் | கவனம் |
| விருச்சி | சிரமம் |
| தனுசு | களிப்பு |
| மகரம் | உழைப்பு |
| கும்பம் | எதிர்ப்பு |
| மீனம் | பாராட்டு |

## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# மணிப்பூர் பெண்கள் மீதான வன்முறையால் மனம் உடைந்தேன் முதல்வர் ஸ்டாலின் ட்வீட்

சென்னை , ஜூலை- 21-

மணிப்பூர் பழங்குடியின பெண்கள் மீதான வன்முறையை கண்டு மனம் உடைந்து போயுள்ளதாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ட்வீட் செய்துள்ளார். இது தொடர்பாக தனது கண்டனத்தையும் அவர் பதிவு செய்துள்ளார்.



மணிப்பூர் மாநிலத்தில் குகி பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்த இரண்டு பெண்களை, மைதேயி சமூகத்தைச் சேர்ந்த ஆண்கள் குழு ரோட்டில் நிர்வாணமாக இழுத்துச் செல்லும் வீடியோ ஒன்று வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அந்த இரண்டு பெண்களையும் அந்தக் குழு பாலியல் வன்கொடுமை செய்த அதிர்ச்சி தகவலும் வெளியாகியுள்ளது. இது நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. பலரும் தங்களது கண்டனங்களை பதிவு செய்து வருகின்றனர்.

"மணிப்பூரில் பெண்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட கொடூர வன்முறை செயலின் வீடியோவை பார்த்து மனம் உடைந்து போயுள்ளேன். இந்த வெறுப்பும், விஷமும் சார்ந்த பிரச்சாரம் மனித குலத்தின் ஆன்மாவையே வேரோடு பிடுங்குகிறது. இந்த அட்டூழியங்களுக்கு எதிராக நாம் ஒன்றுபட்டு நின்று, சிறந்த சமுதாயத்தை வளர்ப்பதற்கு உழைக்க வேண்டும்.

மணிப்பூரில் அமைதி திரும்பதேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு முன்னெடுக்க வேண்டும்" என முதல்வர் ஸ்டாலின் தனது ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

# அரியலூரில் அதிமுக கண்டன ஆர்ப்பாட்டம்

அரியலூர் ஜூலை 21

அரியலூரில் அதிமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழகத்தில் தக்காளி, காய்கறி உட்பட அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்தாத திமுக அரசை கண்டித்து, அரியலூர் தாலுக்கா அலுவலகம் எதிரே, அதிமுக சார்பில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு, அக்கட்சியின் அரியலூர் மாவட்ட செயலாளரும், முன்னாள் அரசு தலைமை கொரடாவுமான தாமரை எஸ். ராஜேந்திரன் தலைமை வகித்தார். ஜெயங்கொண்டம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ராமஜெயலிங்கம் வரவேற்றுப் பேசினார்.



கண்டன ஆர்ப்பாட்டத்தில், அரியலூர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்க தலைவர் கல்லங்குறிச்சி பாஸ்கர், அதிமுக மாவட்ட அணி நிர்வாகிகள் ரீடு செல்வம், ஓபி சங்கர், ஜீவா அரங்கநாதன், ஓட்ட கோவில் சிவசங்கர், அக்பர் ஷெரீப், தங்க பிச்சமுத்து, யூனியன் சேர்மன்கள் ஆண்டிமடம் மருதமுத்து, மகாலட்சுமி, செந்தமிழ்ச்செல்வி, நகர செயலாளர் அரியலூர் ஏ பி செந்தில், ஜெயங்கொண்டம் செல்வராஜ், உடையார்பாளையம் அழகேசன், மாவட்ட ஊராட்சி கவுன்சிலர் பாளையங்கரை ராஜேந்திரன், ஒன்றிய கவுன்சிலர்கள் வைப்பம் சிவபெருமாள், சுந்தரவடிவேல், ஊராட்சி மன்ற தலைவர் தாமரைக் குளம் பிரேம் குமார், கீழப்பழுவூர் மருதமுத்து, ஒன்றிய செயலாளர்கள் பொய்யூர் பாலசுப்பிரமணியன், வைத்தியநாதன், திருமானூர் வடிவழகன், சாமிநாதன், ஜெயங்கொண்டம் கல்யாணசுந்தரம், விக்கிரம பாண்டியன், ஜெயங்கொண்டம் கே .எஸ். தேவா, வக்கீல்கள் ராம கோவிந்தராஜன், சண்முகம், தகவல் தொழில் நுட்ப அணி வசந்தகுமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### அகமதாபாத்தில் பயங்கரம்

# விபத்தை பார்வையிட்டவர்கள் மீது ஜாகுவார் மோதியதில் 9 பேர் பலி

**அகமதாபாத், ஜூலை- 21-**

அகமதாபாத்தில் பயங்கரம் விபத்தை பார்வையிட்டவர்கள் மீது ஜாகுவார் கார் மோதியதில் 9 பேர் பரிதாபமாக பலியானார்கள்.



குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் இஸ்கான் பாலம் உள்ளது. இந்த பாலத்தில் நேற்று காலை லாரி-ஜீப் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளது. இந்த விபத்து நடந்த இடத்திற்கு போலீசார் விசாரணை நடத்துவதற்கான சென்றுள்ளனர். அதவேளையில் விபத்து நடந்த இடத்தை அருகில் உள்ளவர்கள் சென்று பார்த்துள்ளனர். இதனால் விபத்து நடந்த பகுதியில் பலர் கூடியிருந்தனர்.

அப்போது அந்த பகுதியில் வந்த ஜாகுவார் சொகுசு கார் கூடியிருந்தவர்கள் மீது பயங்கரமாக மோதியது. ஜாகுவார் கார் 160 மீட்டர் வேககத்தில் வந்ததால், பலர் தூக்கி வீசப்பட்டனர். இந்த சம்பவத்தில் 9 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். விசாரணை நடத்த வந்த போலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் இதில் அடங்குவார். இந்த விபத்தில் ஜக்குவார் டிரைவர் காயத்துடன் உயிர்தப்பினார். ஒரு விபத்தை பார்க்க சென்று 9 பேர் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.






காரைக்கால் மாவட்டம் செருமாவிலங்கையில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராஜர் பொறியியல் கல்லூரியில் ஆசிரியர்கள் சரியான நேரத்தில் பணிக்கு வரவில்லை என்று பல்வேறு புகார்கள் வந்த நிலையில் நேற்று காலை மாவட்ட ஆட்சியர் திடீர் ஆய்வு மேற்கொண்டார். பல்வேறு இடங்களை ஆய்வு மேற்கொண்ட ஆட்சியர் வருகை பதிவேட்டை பார்வையிட்டார். மேலும் ஆசிரியர்கள் குறித்த நேரத்தில் பணிக்கு வர வேண்டும் என கேட்டு கொண்டார். மேலும் ஆட்சியர் வேறு ஏதேனும் குறைகள் உள்ளனவா என்று ஆசிரியர்களிடம் தனித்தனியே கேட்டறிந்தார். இரண்டு முறை இந்த கல்லூரிக்கு ஆய்வுக்கு வந்துள்ளேன் என்று கூறிய ஆட்சியர், ஆசிரியர்கள் தாமதமாக பணிக்கு வந்தால் இங்கு அமைந்துள்ள சி.சி.டி.வி. கேமராவில் ஆய்வு மேற்கொள்ளப்படும் என்றும் கூறினார்,



ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா நடத்திய மாநில அளவிலான வினாடி வினா போட்டியில் புதுச்சேரியில் நடைபெற்ற போட்டியில் காரைக்கால் மாவட்டத்தை சேர்ந்த மேயர் சௌந்திரரங்கன் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் இரண்டாம் இடத்தை டி.ஆர்.பட்டினம் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் மூன்றாம் இடத்தையும் பெற்றனர். இவர்கள் அனைவரும் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் சந்தித்து வாழ்த்து பெற்றவர்கள், இந்நிகழ்வில் முதன்மை கல்வி அதிகாரி ராஜசேகரன் மற்றும் அனைவருக்கும் கல்வி இயக்கம் திட்ட இயக்குனர் ஷீலா ஜெயக்குமாரி கலந்து கொண்டார்.

# தமிழகத்தில் காற்றாலைகள் மூலம் ஆடி மாதம் முதல் நாளில் 106 மில்லியன் யூனிட் மின் உற்பத்தி

கோவை , ஜூலை- 21-

ஆடி மாதம் தொடங்கியுள்ள நிலையில், முதல் நாளில் தமிழகம் முழுவதும் 106 மில்லியன் யூனிட் மின்சாரம் காற்றாலைகள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் நடப்பாண்டு காற்றாலை மின் உற்பத்தி சீசன் ஜூன் 1-ம் தேதி தொடங்கியுள்ளது. காற்றின் வேகம் தினமும் மாறுபட்ட காரணத்தால் அதிகபட்சமாக 80 மில்லியன்யூனிட் வரைமின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. ஆடி மாதம் காற்றின் வேகம் அதிகம் இருக்கும் என்பதால் காற்றாலைகள் தொழிலில் 'பீக் சீசன்' என்று அழைக்கப்படுகிறது.

நடப்பாண்டு ஆடி மாதம் திங்கள் கிழமை (ஜூலை 17) தொடங்கியது. முதல் நாளில் இருந்தே காற்றின் வேகம் அதிகரித்து காணப்படுகிறது. இதனால் காற்றாலைகள் மூலம் அதிக மின் உற்பத்தி செய்யப்படுகிறது.

இது தொடர்பாக இந்திய காற்றாலை மின் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் கஸ்தூரி ரங்கையன் கூறியதாவது: ஆடி மாதம் தொடங்கிய முதல் நாளில் மொத்தம் 106 மில்லியன் யூனிட் மின்உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. தினமும் காற்றின் வேகம் அதிகரித்து காணப்படுவதால் எதிர்வரும் நாட்களில் மின் உற்பத்தியும் சிறப்பாக இருக்கும்.

நேற்று தமிழகத்தின் சில பகுதிகளில் மேகமூட்டம், மழைப் பொழிவு காணப்பட்டதால் காற்றின் வேகம் சற்று குறைந்துள்ளது. தமிழகத்தில் கடந்த 2 ஆண்டுகளாக காற்றாலைகள் மூலம் முறையே 12 ஆயிரம் மில்லியன் யூனிட் வீதம் மொத்தம் 24 ஆயிரம் மில்லியன் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. காற்றாலைகள் மூலம் அதிக மின் உற்பத்தி செய்யப்பட்டாலும், தமிழக அரசு அதை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்வதில்லை.

அனல் மின் நிலையங்கள் மூலம் போதிய மின் உற்பத்தி கிடைப்பதால் காற்றாலை மின்சாரத்தை வாங்க ஆர்வம் காட்டுவதில்லை. ஏற்கெனவே வழங்கப் பட்டு வந்த சலுகைகளையும் திரும்பப் பெற்று வருகிறது. இது ஏற்புடையதல்ல. பழைய காற்றாலைகளை பயன்படுத்துவதை நிறுத்துமாறு அரசு அறிவுறுத்துகிறது.

மின் உற்பத்தி செய்யப்பட்டு வரும் காற்றாலைகள் பழையதாக இருந்தால் என்ன, புதிதாக இருந்தால் என்ன, அவற்றில் இருந்து மின் உற்பத்தி செய்யும் வரை அவற்றை பயன்படுத்த வேண்டும். இதுகுறித்து எங்கள் சங்கம் சார்பில் அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டதை தொடர்ந்து அரசு கலந்து பேசி முடிவு மேற்கொள்ளலாம் என தெரிவித்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# மயிலாடுதுறையில் வேளாண்மை விரிவாக்க மைய புதிய கட்டிடங்களை அமைச்சர் மெய்யநாதன் திறந்து வைத்தார்





மயிலாடுதுறை, ஜூலை- 21-

மயிலாடுதுறை மாவட்டம் மணல்மேடு, திருமங்கலம், பொறையார், மங்கைநல்லூர் உள்ளிட்ட கிராமங்களில் தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் துறை நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் துணை வேளாண்மை விரிவாக்க மைய கட்டிடங்கள் திறப்பு விழா நிகழ்ச்சிகள் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி தலைமையில் நடைபெற்றது.

பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும், மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் ராஜகுமார், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் பன்னீர்செல்வம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உமா மகேஸ்வரி சங்கர், வேளாண்மை துறை இணை இயக்குனர் சேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சிகளில் சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சரும் மயிலாடுதுறை பொறுப்பு அமைச்சருமான சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு புதிய கட்டடங்களை திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார்.

அந்த வகையில் தரங்கம்பாடி தாலுக்கா பொறையாரில் ரூ.38 லட்சம் மதிப்பீட்டில் துணை வேளாண்மை விரிவாக்கமையக் கட்டிடம் திறப்பு விழா சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன் கலந்து கொண்டு புதிய கட்டிடத்தை ரிப்பன் கத்திரித்து, குத்து விளக்கு ஏற்றி திறந்து வைத்து குருவை சிறப்பு தொகுப்பு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு இடுபொருள்களை மற்றும் உபகரணங்கள் வழங்கினார். தொடர்ந்து பொறையார் பேரூராட்சி தூய்மை பணியாளர்களிடம் உரையாற்றினார்.

இதில் மயிலாடுதுறை மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் நிர்வாகக் குழு தலைவர் மு. ஞானவேலன், தஞ்சை மண்டல தகவல் தொழில்நுட்ப அணி பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், திமுக ஒன்றிய செயலாளர்கள் மங்கை சங்கர், ஞான.இமயநாதன், இளையபெருமாள், எம். அப்துல்மாலிக், அமுர்த. விஜயகுமார், ஊராட்சி ஒன்றிய குழு தலைவர்கள் காமாட்சி மூர்த்தி மகேந்திரன், நந்தினி ஸ்ரீதர், பேரூராட்சி தலைவர் சுகுண சங்கரி குமரவேல், தரங்கைப் பேரூர் திமுக செயலாளர் முத்துராஜா, வேளாண்மை துறை செயற்பொறியாளர் பழனிச்சாமி, வேளாண்மை துணை இயக்குனர் மதியரசன், மாவட்ட ஆட்சி நேர்முக உதவியாளர் ஜெயபாலன், வேளாண்மை உதவி இயக்குனர் சுப்பையன், வேளாண்மை அலுவலர் விண்ணரசி, துணை வேளாண் அலுவலர் உமா பசுபதி, விதை அலுவலர்கள் நடராஜன், உதவி வேளாண்மை அலுவலர்கள் ரவிச்சந்திரன் ஜெயக்குமார், உதயசூரியன், மாணிக்கம் பயிர் அறுவடை பரிசோதனையாளர்கள் கணேசமூர்த்தி, சங்கர் மற்றும் மாவட்ட, ஒன்றிய, பேரூர் திமுக நிர்வாகிகள், விவசாயிகள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# அதிமுகவைப் போல்தான் திமுக என பாஜகவினர் நினைக்க வேண்டாம் அமைச்சர் உதயநிதி

**கள்ளக்குறிச்சி, ஜூலை- 21-**

அமலாக்கத்துறை சோதனை விவகாரத்தில், அதிமுகவைப் போல்தான் திமுகஎன்றுபாஜகநினைத்துக் கொண்டிருக்கிறது. நாங்கள் மோடிக்கும் பயப்பட மாட்டோம்; 'ஈடி'க்கும் பயப்பட மாட்டோம் என்று கள்ளக்குறிச்சி கட்சி நிகழ்வில் பங்கேற்ற அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் துறை ரீதியான ஆய்வுக் கூட்டங்களில் பங்கேற்று, அரசு நலத் திட்ட உதவிகளை வழங்குவதற்காகவும், திமுக கட்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காகவும் புதன்கிழமை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வருகை தந்தார். பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில், ரிஷி வந்தியம் எம்.எல்.ஏ வசந்தம் கார்த்திகேயன் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் புவனேஸ்வரி பெருமாள் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் சார்பில் அமைச்சர் உதயநிதிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

முதல் நிகழ்ச்சியாக மாடாம்பூண்டியில் 100 அடி உயரமுள்ள திமுக கொடிக் கம்பத்தில் கட்சிக் கொடியேற்றி வைத்தார். தொடர்ந்து ரிஷி வந்தியத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டார். அப்போது அவர்களிடையே பேசிய உதயநிதி, "ஒவ்வொரு மாவட்டத்திலும் கட்சிக்கு ஒரு அலுவலகம் இருக்கும். ஆனால் அதிமுக-விலோ சசிகலா, தீபா அணி, ஓபிஎஸ், இபிஎஸ் என மூன்று, நான்கு அலுவலகங்கள் இருக்கின்றன.

இதனால் அக்கட்சித் தொண்டர்கள் எங்கு செல்வது என திணறி வருகின்றனர். இதே போல் பாஜகவுக்கும் ஐடி, ஈடி உள்ளிட்ட அணிகள் உண்டு. இவர்கள் தேர்தல் நேரத்தின் போது இறக்கி விடப்படுவார்கள். நான் குறிப்பிடும் இந்த பாஜக அணியில் உள்ள 95 சதவீதத்தினர், மற்ற கட்சியினர் வீடுகளில் சோதனை நடத்தி வருகின்றனர்.

ஊழல் ஒழிப்புப் பற்றி பேசி வரும் தமிழக ஆளுநர், அதிமுக முன்னாள் அமைச்சர்களான கே.சி. வீரமணி, விஜயபாஸ்கர், பி.வி. ரமணா உள்ளிட்டோருக்கு எதிரான ஊழல் புகார்களை விசாரிக்க அனுமதி மறுக்கிறார். கடந்த ஆட்சியின் போது, அமலாக்கத் துறை நடத்திய சோதனையில் சிக்கியவர்களிடம் சோதனை நடத்தவில்லை. மாறாக அவர்களை அடிமைப்படுத்திக் கொண்டனர். அதுபோல திமுக-வையும் மத்திய பாஜக நினைத்துக் கொண்டிருக்கிறது.

தமிழகத்தில் நடப்பது எடப்பாடி பழனிசாமி தலைமையிலான ஆட்சியோ, ஓபிஎஸ் தலைமையிலான ஆட்சியோ அல்ல. தமிழகத்தை ஆண்டு கொண்டிருப்பது முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆட்சி. எனவே உங்களது மோடிக்கும் பயப்பட மாட்டோம், ஈடி-க்கும்பயப்பட மாட்டோம். உங்கள் பம்மாத்து வேலையெல்லாம் இங்கு நடக்காது" என்றார்.

முன்னதாக திருக்கோவிலூர் ஒன்றிய திமுக செயலாளர்கள் கிருஷ்ணமூர்த்தி, ராஜேந்திரன், ஐயனார், மணலூர்பேட்டை பேரூர் செயலாளர் ஜெய்கணேஷ், திருக்கோவிலூர் நகரத் தலைவர் முருகன்,துணைத் தலைவர் உமா மகேஸ்வரி, திருக்கோவிலூர் ஒன்றியக்குழுத் தலைவர் அஞ்சலாட்சி அரசக்குமார், துணைத் தலைவர் தனம் சக்திவேல்,

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் உதயா, ரிஷி வந்தியம் ஒன்றியக் குழுத் தலைவர் வடிவுக் கரசி சாமி சுப்ரமணியம், துணைத் தலைவர் சென்னம்மாள் அண்ணாதுரை, ரிஷிவந்தியம் ஒன்றிய செயலாளர்கள் பெருமாள், துரை முருகன், பாரதிதாசன், தியாகதுருகம் ஒன்றியக் குழுத் தலைவர் தாமோதரன், துணைத் தலைவர் நெடுஞ்செழியன், தெற்கு ஒன்றிய செயலாளர் அண்ணாதுரை, மாவட்டப் பிரதிநிதி மடம் பெருமாள் உள்ளிட்டோர் அமைச்சர் உதயநிதியை வரவேற்று சால்வை அணிவித்தனர்.

# அரியலூர் அருகே வி. கைகாட்டியில் வன்னியர் சங்க கொடி ஏற்று விழா

அரியலூர் ஜூலை 21

அரியலூர் அருகே வி கைகாட்டியில் வன்னியர் சங்க கொடி ஏற்று விழா நடைபெற்றது.



வன்னியர் சங்க 44 வது ஆண்டு துவக்க விழாவை முன்னிட்டு, அரியலூர் அருகே வி. கைகாட்டியில் நடைபெற்ற வன்னியர் சங்க கொடி ஏற்று விழாவுக்கு, சங்கத்தின் மாவட்ட செயலாளர் தர்ம பிரகாஷ் தலைமை வகித்தார். பாட்டாளி மக்கள் கட்சியின் அரியலூர் தெற்கு ஒன்றிய செயலாளர் செம்மலை வரவேற்று பேசினார். கட்சியின் மாவட்ட செயலாளர் ரவிசங்கர், அமைப்பு செயலாளர் பெரிய திருக்கோணம் ரமேஷ் முன்னிலை வகித்தனர்.

வன்னியர் சங்கத்தின் மாநில செயலாளர் வைத்தியலிங்கம், சங்க கொடியை ஏற்றி வைத்து பேசினார். இந்நிகழ்ச்சியில் பாட்டாளி மக்கள் கட்சி மாவட்ட தலைவர் சின்னத்துரை, ராமதாஸ், தொகுதி என்கிற அன்பழகன் மற்றும் பா.ம.க., வன்னியர் சங்க நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சீர்காழி அருகே மாவட்ட ஆட்சியரின் மக்கள் தொடர்பு முகாம்



சீர்காழி , ஜூலை. 21-

சீர்காழி அருகே மாவட்ட ஆட்சியரின் மக்கள் தொடர்பு முகாம் நடைபெற்றது. நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் மகாபாரதி மற்றும் சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் பன்னீர்செல்வம் உள்ளிட்டோர் வழங்கினர்.

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே புத்தூர் கூத்தியம் பேட்டை கிராமத்தில் மாவட்ட ஆட்சியரின் மக்கள் தொடர்பு முகாம் நடைபெற்றது. முகாமில் மாவட்ட ஆட்சியர் ஏ.பி. மகாபாரதி மற்றும் சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் பன்னீர்செல்வம் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இந்த முகாமில் 157 மனுக்கள் பெறப்பட்டது. இதில் 68 மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இலவச வீட்டுமனை பட்டா 74 பேருக்கும், ஓ.எ.பி 28 பேருக்கும், மாற்றுத்திறனாளி உதவித்தொகை 2 பேருக்கும் வழங்கப்பட்டது. தொடர்ந்து தோட்டக்கலைத் துறை சார்பில் ரூபாய் 5 லட்சம் மதிப்பீட்டில் உபகரணங்கள் மற்றும் கர்ப்பினி பெண்களுக்கான ஊட்டசத்து பெட்டகம், விவசாயிகளுக்கு மானியத்துடன் இடுபொருட்கள், மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு கண் கண்ணாடி, பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டா உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் வழங்கினர்.

இதில் சீர்காழி தாலுகா பகுதிகளைச் சேர்ந்த ஏராளமானோர் பங்கேற்று பயனடைந்தனர்.

# மாநில அளவிலான சப் ஜூனியர் மற்றும் ஜூனியர்களுக்கான வூசு போட்டி



சென்னை , ஜூலை. 21-

மாநில அளவிலான சப் ஜூனியர் மற்றும் ஜூனியர் கான வூசு போட்டி திண்டிவனம் ஸ்ரீ தரம்சந்த் ஜெயின் (CBSC) பள்ளியில் கடந்த 7, 8 மற்றும் 9 ம் தேதி நடைபெற்றது. இதில் சென்னை உட்பட பல மாவட்டங்கள் கலந்து கொண்டனர்.

சென்னை மாவட்ட வூசு செயலாளர் விசாகபதி, சென்னை மாவட்ட வூசு தொழில்நுட்ப இயக்குனர் தண்டபாணி, மற்றும் பயிற்சியாளர்கள் சுவாதி, கிஷோர் குமார் ஆகியோர் மாநில அளவிலான போட்டிக்கு மாணவ மாணவியர்களை அழைத்துச் சென்றனர்.

சென்னை மாவட்டத்தை சேர்ந்த மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டு 5 தங்கப் பதக்கங்களும், 2 வெள்ளி பதக்கங்களும், 9 வெண்கல பதக்கங்களும் பெற்றுள்ளனர். வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களை சென்னை மாவட்ட வூசு கௌரவ தலைவர்கள் சுரேஷ்குமார் மற்றும் மனேகர பூபதி சென்னை மாவட்ட வூசு தலைவர் புல்கானி, சென்னை மாவட்ட வூசு துணைத் தலைவர் ஆலயகுமார், சென்னை மாவட்ட வூசு பொருளாளர் ஜெயச்சந்திரன், புதுகை வரலாறு சென்னை பதிப்பின் தலைமை செய்தி ஆசிரியர் சு.காதர் உசேன், நேத்தாஜி சமூக சேவை இயக்கத்தின் தலைவர் டாக்டர் சரத் மற்றும் செயலாளர் வன்னியராஜன், சாரதா மெட்ரிகுலேஷன் பள்ளியின் தாளாளர் சரவணன், பத்திரிகையாளர் கோட்டீஸ்வரன் ஆகியோர் மாநில அளவிலான போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கும் மேலும் தேசிய அளவிலான போட்டியில் பங்கு கொள்ளும் மாணவமாணவியர்களுக்கும் பாராட்டி வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.



புதுக்கோட்டை மாத்தூர் வள்ளலார் மாணவர் இல்லத்தில் புதுக்கோட்டை ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர் சேவியர் தனது பிறந்த நாளை கொண்டாடும் வகையில் சங்கத்தின் தலைவர் கேஎல்.கேஏ. ராஜாமுகமது தலைமையில் விடுதி மாணவர்களுக்கு மூன்று வேலை உணவினை வழங்கி மகிழ்ந்தார். இந்த நிகழ்வில் சங்கத்தின் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# அன்னவாசல் வட்டார வளமையத்தில் ஒருங்கிணைப்பு குழு கூட்டம்



**அன்னவாசல் , ஜூலை. 21-**

ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி அன்னவாசல் வட்டார வளமையத்தில் வட்டார அளவிலான ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடைபெற்றது.

வட்டார கல்வி அலுவலர்கள் அலெக்சாண்டர், ஷெலின், கலா ஆகியோர் தலைமையில் நடந்தது. ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திற்கு சிறப்பு பார்வையாளர்களாக உதவி திட்ட அலுவலர் சுதந்திரன்மற்றும்மாவட்ட ஒருங்கிணைப்பாளர்ஜான் சுரேஷ் கலந்துகொண்டு மாற்றுத்திறன் குழந்தைகளின் கல்வி வளர்ச்சி மற்றும் உதவிகள் குறித்து விரிவாக குழுவினருடன் விவாதித்தனர்.

முன்னதாக கூட்டப் பொருள் குறித்து அன்னவாசல் ஒருங்கிணைப்பாளர் கவிதா மாற்றுத்திறன் குழந்தைகள் அனைவரும் கண்டிப்பாக அடையாள அட்டை பெற்றிருக்க வேண்டும். ஆகஸ்ட் மாதம் நடைபெறுவதாக இருக்கிற மருத்துவ முகாமில் அனைத்து மாற்றுத்திறன் குழந்தைகளும் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளைப் பெற செய்ய வேண்டும் என்றும் அரும்பு மொட்டு மலர் என்ற நிலையில் உள்ள குழந்தைகளுக்கான எண்ணும் எழுத்தும் பயிற்சி ஏடு சரியாக பயன்படுத்தப்பட வேண்டும் சிறப்பாசிரியர்கள் மற்றும் இயன்முறை மருத்துவர் மாற்றுத்திறன் குழந்தைகளுக்கான தனிநபர் அளவீட்டு படிவங்களை சரியாக கடைபிடிக்க வேண்டும் என்றும் எடுத்துரைத்தார்.

உதவிதிட்ட அலுவலர் சுதந்திரன் பேசுகையில், மாற்றுத்திறன் குழந்தைகளுக்கான சிறப்புப்ப யிற்றுநர் மற்றும் இயன்முறை மருத்துவரின் சேவை மிகவும் இன்றியமையாதது என்றும் மாற்றுத்திறன் குழந்தைகளுக்கான உதவிகளை மருத்துவ முகாம் வரை காத்திருக்காமல் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் இருந்தும் குழந்தைகளுக்கு பெற்று கொடுக்கலாம் என்றும் அதற்கான அனைத்து உதவிகளையும் செய்ய தயாராக இருப்பதாகவும் கூறினார். இந்த ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் ஆசிரியர் பயிற்றுநர்கள் மனோகரன், செந்தில்குமார், ஜோசப், மீனாட்சி, உமா மகேஸ்வரி, வைரமுத்து மற்றும் சிறப்பு பயிற்றுநர்கள் பாஸ்கர சேதுபதி, சந்திரா கலைச்செல்வி ரூபா மற்றும் இயன்முறை மருத்துவர் கோவிந்தசாமி ஆகியோர் கலந்து கொண்டனர். ஆசிரியர் பயிற்றுநர் விஜயகுமார் நன்றி கூறினார்.



புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் "தமிழ்நாடு நாள் விழா" புகைப்படக்கண்காட்சியினை மூன்றாவது நாளான நேற்று புதுக்கோட்டை கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக் கல்லூரி மற்றும் சந்தைப்பேட்டை மேல்நிலைப்பள்ளி மாணவியர்கள் பார்வையிட்டார்கள்.

# சீர்காழி சட்டைநாதர் சுவாமி கோயிலில் மண்டலாபிஷேக பூர்த்தி இரண்டாம் நாள் விழா. 1008 சங்காபிஷேகம்





சீர்காழி , ஜூலை. 21-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் தர்மபுரம் ஆதீனத்திற்கு உட்பட்ட சட்டைநாதர் சுவாமி கோயில் உள்ளது. இக்கோயிலில் திருநிலைநாயகி அம்மன் உடனடியாக பிரமபுரீஸ்வரர் சுவாமி அருள் பாலிக்கிறார். பிரசித்தி பெற்ற கோயிலில் கடந்த மே மாதம் 24 ஆம் தேதி கும்பாபிஷேகம் நடைபெற்று முடிந்தது.

இந்நிலையில் மண்டலாபிஷேகம்பூர்த்திவிழா தொடங்கி நடைபெறுகிறது. இரண்டாவது நாளாக பிரம்மபுரீஸ்வர் சுவாமிக்கு 1008 சங்காபிஷேகம் நடந்தது.

முன்னதாக புனித நீர் அடங்கிய கடங்கள் வைக்கப்பட்டு சிறப்பு யாகம் செய்து தீபாராதனை நடந்தது. தொடர்ந்து தருமபுரம் ஆதீனம் 27ஆவது குரு மகா சந்திதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் முன்னிலையில் புனித நீர் அடங்கிய கடங்கள் புறப்பட்டு மேள, தாளங்கள் முழங்க கோயிலை வலம் வந்து மூலவர் பிரம்மபுரீஸ்வரர் சுவாமிக்கு புனித நீர் கொண்டு அபிஷேகமும் தொடர்ந்து 1008 சங்குகளில் நிரப்பப்பட்டிருந்த புனித நீரால் சங்காபிஷேகம் செய்யப்பட்டு மகா தீபாராதனை காட்டப்பட்டது.

தொடர்ந்து திருநிலை நாயகி அம்மனுக்கு 108 சங்காபிஷேகம் நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர் .

# காரைக்காலில் சைபர் கிரைம் செல் தொடக்கம் முதுநிலை காவல் கண்காணிப்பாளர் திறந்து வைத்தார்



**காரைக்கால், ஜூலை. 21-**

காரைக்கால் மாவட்டத்தில் உள்ள காவல்துறையில் பல்வேறு பிரிவுகள் இருந்த போதிலும் தற்போதுள்ள காலகட்டத்தில் இணையதள வழியான குற்றங்கள் பெருகி வருவதாலும் சைபர் கிரைம் சம்பந்தப்பட்ட வழக்குகளை புதுச்சேரிக்கு அனுப்பி அவர்களிடமிருந்து தகவல் பெற்று பின்னர் குற்றவாளிகளை தேடு முயற்சியில் காரைக்கால் போலீசார் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில்காரைக்கால் மாவட்டத்திற்கான தனியாக சைபர் கிரைம் செல் அமைக்க வேண்டும் என பொதுமக்கள் தரப்பிலிருந்து கோரிக்கை எழுந்து வந்தது இந்நிலையில் புதிதாக பொறுப்பேற்று இருக்கும் முது நிலை காவல் கண்காணிப்பாளர் மணீஷ் தனது முயற்சியால் காரைக்கால் மாவட்ட காவல்துறை சார்பாக கணினி சார்ந்த குற்றங்களை தடுக்கும் பொருட்டு காரைக்காலில் சைபர் பாதுகாப்பு பிரிவு இன்று தொடங்கப்பட்டது.

இதனை காரைக்கால் முதுநிலை கண்காணிப்பாளர் மணீஷ் திறந்து வைத்தார். இந்த பிரிவு காரைக்கால் மாவட்டத்தில் நடைபெறும் இணைய வழியான குற்றங்களை கண்டறிவதுடன் மாவட்டத்தில் உள்ள காவல் நிலையங்களில் பதியப்படும் இணையவழிகுற்றங்களையும் கண்காணித்து குற்றம் நடக்காமல் தடுக்கவும் குற்றவாளிகளை பிடிப்பதற்கு உறுதுணையாகவும் இருக்கும். சைபர் கிரைம் குறித்த புகார் அளிக்க 9489205364 என்ற எண்ணில் தொலைபேசி வழியாகவும் whatsapp வழியாகவும் புகார் அளிக்கலாம்.

# பல்வேறு அடிப்படை கோரிக்கைகளை வலியுறுத்தி திருப்பட்டினம் கிராம மக்கள் ஆர்ப்பாட்டம்



**காரைக்கால், ஜூலை. 21-**

காரைக்கால் மாவட்டம் திருப்பட்டினம் சட்டமன்ற தொகுதியில் உள்ள வடக்குத்தெரு, நடுத்தெரு, தெற்கு தெரு, அய்யனார் கோவில் தெரு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்டோர் பல்வேறு அடிப்படை கோரிக்கைகளை வலியுறுத்தி சமூக ஆர்வலரும்ஆயுள் காப்பீடு மன்ற முகவர் காதர் மெய்தீன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

100 நாள் வேலை திட்டத்தை 100 நாட்கள் வழங்க வேண்டும், விதவைகள் மற்றும் முதியோர்களுக்கு பென்ஷன் வழங்க வேண்டும், கீழையூர் கிராமத்தில் நீர்த்தேக்க தொட்டி அமைத்து இலவச குடிநீர் வழங்க வேண்டும், திருப்பட்டினம் மருத்துவமனையில் 24 மணி நேரமும் மருத்துவர் சேவை மற்றும் ஆம்புலன் வசதியை ஏற்படுத்த வேண்டும், கிராமப் பகுதிகளில் சாலை மற்றும் சாக்கடை வசதிகளை ஏற்படுத்த வேண்டும், அரிசிக்கு பணம் வழங்குவதை கைவிட்டு அரிசியாக வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு அடிப்படை கோரிக்கைகளை முன்வைத்து கிராம மக்கள் திருப்பட்டினம் கடைவீதியில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முன்னதாக கிராம ஒற்றுமை நடைபயணம் செய்வதாக அறிவித்து அதற்கு அனுமதி வழங்கப்படாததால் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் உள்ளிட்ட 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு புதுச்சேரி அரசுக்கு கண்டனம் தெரிவித்து கண்டன முழக்கங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# கரணம் தப்பினால் மரணம் – அந்தரத்தில் பயணிக்கும் பள்ளி மாணவர்கள் அந்தரத்தில் தொங்கும் பாலம் – உயிர்ப்பலி ஏற்படும் முன் சீரமைக்க கோரிக்கை!







சீர்காழி, ஜூலை. 21-

மயிலாடுதுறை மாவட்டம் குறிச்சி ஊராட்சிக்கு உட்பட்ட வேட்டையாம்பாடி கிராமத்தில் சுமார் 200 -க்கு மேற்பட்ட ஏழை எளிய விவசாய கூலி தொழிலாளர்களின் குடும்பங்கள் வசித்து வருகிறனர். இந்த மக்கள் தங்கள் அத்தியாவசிய தேவைகளுக்கு ஊரை விட்டு வெளியில் செல்ல வேண்டும் என்றால் தெற்குராஜன் வாய்க்காலை கடந்துதான் செல்லவேண்டும்.

இந்த வாய்க்கால்களை கடக்க வேண்டும் என்றால் சட்ரஸ் எனப்படும் நீர்ஒழுகி பாலம்தான் இவர்களுக்கு ஒரே வழி. இந்த பாலமும் கட்டப்பட்டு சுமார் 50 ஆண்டுகள் கடந்ததால் சட்ரஸ் எனப்படும், நீர்ஒழுகி பாலம் தற்போது உடைந்து சிதலமடைந்து ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் காணப்படுகிறது.

இந்த சட்ரஸ் பாலம் மயிலாடுதுறை தாலுக்காவையும், சீர்காழி தாலுக்காவையும் இணைக்கு வகையில் அமைந்துள்ளது. இதனால் வேட்டையம்பாடி கிராமத்தை சேர்ந்த பள்ளி, கல்லூரி மாணவர்கள் என அனைவரும் மணல்மேடு , சீர்காழி, கொண்டல் என பல்வேறு ஊர்களுக்கு கல்வி பயில்வதற்கு இந்த உடைந்த ஆபத்தை விளைவிக்கும் பாலத்தை கடந்து சென்று வருகின்றனர்.

அதுமட்டுமின்றி வேட்டையாம்பட்டி கிராமத்தைச் சுற்றி 200 ஏக்கருக்கு மேல் விளை நிலங்களும் அதனை நம்பி விவசாய தொழிலும் நடைபெற்றது வருகின்றது. விவசாயத் தொழிலுக்கு தேவையான இடுபொருள்கள் மற்றும் நெல் கொள்முதல் நிலையங்களுக்கு செல்ல வேண்டும் என்றாலும், இந்த பாலத்தை தான் கடந்து செல்ல வேண்டிய சூழல் உள்ளது.

இந்நிலையில் வேட்டையம்பாடி கிராமத்தில் சட்ரஸ் மதவுடன் கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்பு தெற்குராஜன்வாய்க்காலில் கட்டப்பட்ட பாலம் தற்போது முற்றிலும் வலுவிழந்து, இடிந்து விழுத் தொடங்கியுள்ளது. இந்த பாலம் கடந்த எட்டு மாதங்களுக்கு முன்பு ஒரு பகுதியில் பெரிய அளவில் பள்ளம் ஏற்பட்டு உடைந்ததால் கார் போன்ற வாகனங்கள் செல்ல முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

அதனால் அவசர தேவைக்கு உயிர்காக்கும் ஆம்புலன்ஸ், தீயணைப்பு வாகனங்கள் என எதுவும் வர முடியாத நிலை உள்ளது. மேலும், அந்த பகுதியில் போதிய மின்விளக்கு வசதிகள் இல்லாததால் இரவு நேரங்களில் வாகன ஓட்டிகள் தடுமாறி விழும் அபாயம் இருந்து வருகிறது. இதுகுறித்து அப்பகுதி மக்கள் கூறுகையில், பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த பாலம் குறித்து பலமுறை அரசு அலுவலர்களிடம் மனு அளித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை என்றும், வேட்டையம்பாடி கிராமத்தில் இருந்து சீர்காழி, கொண்டல், மணல்மேடு, குறிச்சி, மயிலாடுதுறை ஆகிய பகுதிகளுக்கு செல்வதற்கும், பள்ளி, கல்லூரி மாணவர்கள், விவசாயிகளுக்கும் பொதுமக்களுக்கும் இந்த தெற்குராஜன்வாய்க்கால் பாலம்வழியாகத்தான் செல்ல வேண்டும், கொள்ளிடம் ஆற்றில் மணல் ஏற்றிசெல்லும் வாகனங்கள் இந்த வழிதடத்தில் வந்து சாலையை சேதபப்டுத்தி விடுகின்றனர்.

தற்போதுவரை வாய்க்காலில் தண்ணீர் வரவில்லை. இன்னும் ஒரு சில மாதங்களில் மழைகாலம் தொடங்குவதோடு தெற்குராஜன்வாய்க்காலில் தண்ணீர் திறந்துவிட்டால் சிதிலமடைந்த பாலத்தை கடக்கும் போது தடுமாறி யாரேனும் விழுந்தால் ஆற்றுநீரில் சிக்கி பெரும் அசம்பாவிதங்கள் ஏற்படும் என்றும் ஆகையால் இந்த பாலத்தை இடித்துவிட்டு புதிய பாலம் கட்டிதர வேண்டும் என்று மாவட்ட நிர்வாகத்திடம் கோரிக்கைவிடுத்தோம்.

சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் வரும் நிதியாண்டில் இந்த பாலத்தை சீரமைக்க முயற்சி செய்வதாக கூறுகின்றனர். இதுபோன்று பல அதிகாரிகள் கூறுவதாகவும், அதற்குள் அந்த அதிகாரி இடமாறுதலில் சென்று விடுவதால் அப்படியே கிடப்பில் போட்டுவிடுகின்றனர் என வேதனை தெரிவிக்கின்றனர்.

மழைகாலத்திற்குள்ளாக பாலத்தை இடித்து புதிய பாலத்தை கட்டித்தர வேண்டும். தடுப்புகள் அமைத்து பெரிய அளவில் விபத்துக்கள் ஏற்படாமல் தடுக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளனர். இது குறித்து நடவடிக்கை இல்லை என்றால் விரைவில் மிகப் பெரிய அளவில் போராட்டத்தில் ஈடுபட்ட உள்ளதாகவும் எச்சரிக்கை விடுத்தனர்.

## கந்தர்வகோட்டை அரசுப் பள்ளியில்

# சுதந்திர தினத்தை முன்னிட்டு விளையாட்டு போட்டி மற்றும் செஸ் போட்டி நடைபெற்றது



*கந்தர்வகோட்டை, ஜூலை.21-*

*புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் அரசு உயர்நிலைப் பள்ளி குளத்தூர் நாயக்கர் பட்டியில் உலக செஸ் தினத்தை முன்னிட்டு செஸ் போட்டியும் , சுதந்திர தினத்தை முன்னிட்டு விளையாட்டு போட்டியும் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு தலைமை ஆசிரியர் பெரியசாமி தலைமை வகித்தார்.*

*பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் புண்ணியமூர்த்தி , பள்ளி மேலாண்மை குழுத் தலைவி மல்லிகா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*அறிவியல் பட்டதாரி ஆசிரியர் குணசேகரன் அனைவரையும் வரவேற்றார்,இந்நிகழ்வில் இல்லம் தேடி கல்வி ஒருங்கிணைப்பாளர் ரகமதுல்லா கலந்து கொண்டார். மாணவர்களுக்கு உலக செஸ்தின வரலாறு எடுத்து கூறப்பட்டது.*

*எனவே இந்த நிகழ்ச்சியை கொண்டாடுவதன் மூலம் யுனெஸ்கோ உலக அமைதி, சமத்துவம், பாலின ஒற்றுமை உள்ளிட்ட பல்வேறு விஷயங்களையும் வலியுறுத்துகிறது. அதனை தொடர்ந்து சுதந்திர தினத்தை முன்னிட்டு மாணவ, மாணவிகளுக்கு விளையாட்டுப் போட்டிகளான கபடி, கிரிக்கெட் ,நீளம் தாண்டுதல் லெமன் ஸ்பூன், கோகோ உள்ளிட்ட விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது.*

*இப்போட்டிகளை ஆசிரியர்கள் சிவசங்கரன், சாந்தகுமாரி, காளியம்மாள், வெள்ளையம்மாள், விஜயகுமார், தர்மபாய், ராதா அங்காளீஸ்வரி, சங்கர், முத்துலட்சுமி, இலக்கியா, பூபதி ரெகுநாத புரம் மேல்நிலைப்பள்ளி உடற்கல்வி ஆசிரியர் மாலா உள்ளிட்டோர் போட்டிகளை நடத்தினர்.*



புதுக்கோட்டை கம்பன் கழகத்தின் 48 ஆம் ஆண்டு கம்பன் பெருவிழா புதுக்கோட்டை நகர்மன்ற வளாகத்தில் ஜூலை 14ஆம் தேதி வெள்ளிக்கிழமை தொடங்கியது. 7ம் நாள் விழா கவிதைச்சோலைக்கு மா மலர் மருத்துவமனை நிறுவனர் மாரிமுத்து தலைமை வகித்தார். அதனைத் தொடர்ந்து கலைமாமணி கு.ஞானசம்பந்தன் நடுவராக பங்கேற்ற பட்டிமன்றத்திற்கு முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் தலைமை வகித்தார். நிகழ்வில் கம்பன் கழக தலைவர் ராமச்சந்திரன், செயலாளர் சம்பத்குமார், திருமயம் முன்னாள் எம்எல்ஏ வைரமுத்து உள்ளிட்ட கலர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

# பழங்குடிப் பெண்களுக்கு கொடூர அவமதிப்பு மணிப்பூரில் கண்டனப் பேரணியில் குவிந்த மக்கள்



இம்பால் , ஜூலை. 21-

மணிப்பூரில் பெண்களை நிர்வாணப்படுத்தி ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்ட கொடூர வன்முறைச் சம்பவத்தைக் கண்டித்து,அம்மாநிலத்தின் சூர்சந்த்பூர் வீதிகளில் நூற்றுக்கணக்கான பழங்குடியினர் கண்டனப் பேரணி நடத்தினர்.

மணிப்பூர் மாநிலத்தில் குகி பழங்குடியினத்தை சேர்ந்த இரண்டு பெண்களை மைதேயி சமூகத்தைச் சேர்ந்த ஆண்கள் கும்பல் ஒன்று சேர்ந்து நிர்வாணப்படுத்தி வீதியில் ஊர்வலமாக அழைத்துச் சென்ற கொடூரமான வீடியோ சமூக வலைதளங்களில் பகிரப்பட்டு தேசிய அளவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அந்த இரண்டு பெண்களில் ஒருவர் கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கும் ஆளாகியுள்ளார். இதனைத் தொடர்ந்து கொதித்தெழுந்த பழங்குடியினர் நீதி கேட்டு போராட்டம் நடத்த வீதிகளுக்கு வந்துள்ளனர்.

இந்த நிலையில், 26 விநாடிகள் ஓடும் அந்த வீடியோ ஆதாரத்தின் அடிப்படையில் பெண்களை நிர்வாணப்படுத்தி ஊர்வலமாக அழைத்து சென்றவர்களில் முக்கிய நபர் கைது செய்யப்பட்டிருக்கிறார். ஹிராதாஸ் (32) என்ற அந்த நபர் நேற்று தௌபால் மாவட்டத்தில் கைது செய்யப்பட்டதாகவும், அவர் இந்தச் சம்பவத்தின் பின்னணியில் முக்கிய பங்காற்றியிருக்கலாம் என்றும் மணிப்பூர் போலீஸ் தெரிவித்துள்ளது. மேலும், கைது செய்யப்பட்டவர் மீது கடத்தல், பாலியல் வன்கொடுமை, கொலை உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், வீடியோவில் உள்ள பிற நபர்களைப் பிடிக்க 12 குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் மணிப்பூர் போலீஸார் தெரிவித்துள்ளனர்.



சேலம் மாவட்டம், வீரபாண்டி ஊராட்சி ஒன்றியம், உத்தமசோழபுரம் ஊராட்சி, பெருமாள் கோயில் அருகில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் விளக்க சிறு புகைப்படக்கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.



தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் 'தமிழ்நாடு நாள்' சிறப்பு புகைப்பட கண்காட்சியை கடையநல்லூர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, மாறாந்தை அரசு மேல்நிலைப்பள்ளி, மேலகரம் அரசு மேல்நிலைப்பள்ளி, தென்காசி மஞ்சம்மாள் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, காசி தர்மம் அரசு மேல்நிலைப்பள்ளி, செங்கோட்டை அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, வேலாயுதபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி, தென்மலை அரசு மேல்நிலைப் பள்ளி, தென்காசி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளில் இருந்து 60க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் மற்றும் 20க்கும் மேற்பட்ட ஆசிரியர்களும் பார்வையிட்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடியில் கருத்தாயுத குழுவின் சார்பில் பல்லவராயன் பத்தை ஊராட்சியில் நீர் நிலையை ஆக்கிரமித்து நர்சரி கார்டன் அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் நாமுனான் குளம் ஆக்கிரமிப்பை அகற்றி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரக்கோரியும், ஊராட்சி பகுதியில் உள்ள அரசு புறம்போக்கு நிலங்களை பட்டியலிட வலியுறுத்தியும் கறம்பக்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு தொடர் உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது. இந்த உண்ணாவிரத போராட்டத்திற்கு ராஜ ரத்தினம் தலைமை வகித்தார், கருத்தாயுத குழு அமைப்பாளர் துரை குணா உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர்.



மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியின் உணவு அறிவியல் மற்றும் ஊட்டச்சத்துத் திட்டத்தில் துறை சார்பில் மாணவர்களுக்கான இளம் தொழில் முனைவர் வழிகாட்டி நிகழ்ச்சி நடைபெற்றது. கல்லூரி முதல்வர் ராமசுப்பையா தலைமை வகித்தார் செயலாளர் விஜயராகவன், உதவி செயலாளர் ராஜேந்திரபாபு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மத்திய அரசின் சிறு குற்ற நடுத்தர தொழில்கள் அமைச்சகத்தின் வளர்ச்சி நிறுவன உதவி இயக்குனர் ஜெயசெல்வம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். புதிய தொழில் வாய்ப்புகள் மற்றும் அரசின் மானியங்கள் குறித்து மாணவர்களுக்கு விளக்கினார். இளம் தலைமுறையினர் வேலை தேடுவதை தவிர்த்து பிறருக்கு வேலைவாய்ப்புகளை வழங்கி உதவிட துறைத்தலைவர் கோபிமணிவண்ணன் கேட்டுக்கொண்டார், மாணவர் கார்திகேயன் வரவேற்றார், மாணவி பவித்ரா நன்றி கூறினார், துறை பேராசிரியர் பாரதி, மகேஸ்வரி,சரஸ்வதி மற்றும் கவிதா நிகழ்ச்சி ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

# ஆவுடையார்கோவில் ஒன்றியத்தில் மாதாந்திர சாதாரண ஒன்றிய குழு கூட்டம் நடைபெற்றது



ஆவுடையார்கோவில், ஜூலை. 21-

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் ஒன்றிய குழு உறுப்பினர்கள் மாதாந்திர கூட்டம் நடைபெற்றது, இதில் ஒன்றிய பெருந்தலைவர் உமாதேவி தலைமையிலும், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தமிழ்ச்செல்வன், சீனிவாசன் ஆகியோர் முன்னிலையிலும் ஒன்றிய குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டு ஒன்றிய குழு கூட்டம் நடைபெற்றது.

முதலில் பொன் பேத்தி ஒன்றிய குழு உறுப்பினர் சுந்தரபாண்டியன் எழுந்து இரண்டு கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலைகள் மேம்பாட்டிற்கு நிதிநபார்டு மூலம் வந்துள்ளதுஅதை செயல்படுத்துவதில் ஒன்றிய குழு உறுப்பினர் ஒப்புதல் பெறாமல் தீர்மானித்துள்ளது எனவே இனிமேல் அவ்வாறு செயல்படுத்தக் கூடாது என வாதிட்டார், ஒக்கூர் ஒன்றிய குழு உறுப்பினர் அல்லி முத்து எழுந்து ஒக்கூர் பகுதியில் டவர் இல்லாமல் எந்த ஒரு வேலையும் நடைபெறவில்லை என்றும் இது சம்பந்தமாக தீர்மானம் நிறைவேற்றியும் இதுவரை டவர் அமைக்கப்படவில்லை என்று கேள்வி எழுப்பினார்

இக்கூட்டத்தில் ஒன்றிய குழு உறுப்பினர் சிவசங்கர் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றது, அதற்கு எதிர்முனையாக ஆளுநர் செயல்படுகிறார் அவரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று ஒரு தீர்மானம் எழுதி ஒன்றிய பெருந்தலைவரிடம் புகார் மனுவாக அளித்தார் அதை பரிசீலனை செய்து பின்பு தான் முடிவு செய்யப்படும் என்று ஒன்றிய பெருந்தலைவர் கூறியதன் அடிப்படையில் ஒன்றிய குழு உறுப்பினர்கள் சிவசங்கர் ஐயா ரமேஷ் அல்லி முத்து காளியம்மாள் மாவட்ட ஒன்றிய குழு உறுப்பினர் ராமநாதன் ஆகியோர் வெளிநடப்பு செய்தனர் இதனால் ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் பரபரப்பாக இருந்தது அதன் பின்பு செய்தியாளர்களுக்கு கூறுகையில் ஒன்றிய குழு உறுப்பினர் திமுக சிவசங்கர் கூறுகையில் சிறப்பாக செயல்பட்டு கொண்டிருக்கும் திராவிட மாடல் ஆட்சிக்கு எதிராக ஆளுநர் ரவி செயல்பட்டு கொண்டிருக்கிறார் அவரை பதவி நீக்கம் செய்ய நமது ஒன்றிய குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று கூறினேன் அதை பரிசீலனை செய்வதாக ஒன்றிய குழுத் தலைவர் கூறினார் அதனால் நாங்கள் வெளிநடப்பு செய்கின்றோம் அவர் தீர்மானம் நிறைவேற்றும் வரை நாங்கள் ஒன்றிய குழு கூட்டத்தில் கலந்து கொள்ள மாட்டோம் என்று கூறி சிவசங்கர் உட்பட ஐந்து உறுப்பினர்கள் அவையை விட்டு வெளிநடப்பு செய்தார்கள், இந்த நிகழ்ச்சியால் ஒன்றிய குழு கூட்டம் பரபரப்பாக காணப்பட்டது.

# மகாராஷ்டிரா நிலச்சரிவில் பலி எண்ணிக்கை 12 ஆக உயர்வு – முதல் மந்திரி நேரில் ஆய்வு



மும்பை , ஜூலை. 21-

தென்மேற்கு பருவமழையால் மகாராஷ்டிரா மாநிலத்தில் கனமழை பெய்து வருகிறது. குறிப்பாக புனே, மும்பையில் அதி கனமழை பெய்து வருகிறது. இதற்கிடையே, நேற்றிரவு ராய்காட் மாவட்டத்தில் உள்ள கலாபுர் அருகே நிலச்சரிவு ஏற்பட்டது. இப்பகுதியில் பழங்குடியினர் வசிக்கும் குக்கிராமங்கள் உள்ளன.

இதனால் நிலச்சரிவில் சுமார் 30 குடும்பங்கள் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. நேற்று காலை நிலவரப்படி நிலச்சரிவில் இருந்து 25 பேர் மீட்கப்பட்ட நிலையில், 4 பேர் உயிரிழந்தனர். 21 பேர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதாக முதல் கட்ட தகவல் வெளியானது. தேசிய பேரிடர் மீட்புக்குழு படைகள்சம்பவஇடம்அடைந்து, நிலச்சரிவில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், நிலச்சரிவில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 12 ஆக அதிகரித்துள்ளது. தகவலறிந்து முதல் மந்திரி ஏக்நாத் ஷிண்டே ராய்காட் மாவட்டம் சென்று நிலச்சரிவு ஏற்பட்ட பகுதியைப் பார்வையிட்டார். மீட்புப் பணிகள் குறித்து அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். துணை முதல் மந்திரி தேவேந்திர பட்னாவிஸ் சட்டசபையில் நிலச்சரிவு குறித்து பேசினார். மீட்புப் பணிகள் மேற்கொண்டு வருவது பற்றி விளக்கிய அவர், உள்துறை மந்திரியிடம் தற்போதைய நிலவரம் குறித்து தகவல் தெரிவித்துள்ளோம் என கூறினார்.

# பெருங்களூர் அருகே அடையாளம் தெரியாத வாகனம் மோதியதில் முதியவர் படுகாயம்

ஆதனக்கோட்டை, ஜூலை.21-

புதுக்கோட்டை மாவட்டம் வெள்ளவெட்டான்விடுதி கிராமத்தை சேர்ந்தவர் சிதம்பரம் மகன் மகாலிங்கம்(70). இவர் தனது சைக்கிளில் பெருங்களூர் கடைவீதிக்கு சென்றுவிட்டு வீடு திரும்பியபோது கொத்தகோட்டை சந்திரன் ஆர்எஸ்பதி தோட்டத்தின் அருகே செல்லும்போது எதிர்பாராதவிதமாக அடையாளம் தெரியாத வாகனம் மோதியதில் கால் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பலத்தகாயம் ஏற்பட்டது.

இவரைமீட்டுபுதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். அங்கு தீவிர சிகிச்சைபிரிவில் சேர்க்கப்பட்டு மகாலிங்கம் சிகிச்சை பெற்று வருகின்றார். இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த ஆதனக்கோட்டை காவல் உதவி ஆய்வாளர் அருணகிரி விபத்து ஏற்படுத்திவிட்டு நிற்காமல் சென்ற வாகனத்தை வலைவீசி தேடி வருகின்றனர்.

# "மணிப்பூர்... மணிப்பூர்... மணிப்பூர்..." நாடாளுமன்ற இரு அவைகளும் நாள் முழுவதும் ஒத்திவைப்பு

புதுடெல்லி, ஜூலை. 21-

மணிப்பூர் வன்முறை விவகாரம் காரணமாக நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் மழைக்கால கூட்டத் தொடரின் முதல் நாளில் நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டன.

நேற்று காலை 11 மணிக்கு நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் கூடின. மக்களவைத் தொடங்கியதும் சபாநாயகர் ஓம் பிர்லா, இடைப்பட்ட காலத்தில் மரணமடைந்த 2 இந்நாள் மற்றும் 11 முன்னாள் உறுப்பினர்களுக்கான இரங்கல் குறிப்புகளை வாசித்தார். பின்னர், அவையில் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடந்து மதியம் 2 மணி வரை மக்களவை ஒத்திவைக்கப்பட்டது.

அதேபோல், முற்பகல் 11 மணிக்கு மாநிலங்களவைத் தொடங்கியதும் அதன் தலைவர் ஜெக்தீப் சிங் தன்கர் இந்த முறை மாநிலங்களவை உறுப்பினராக இருந்த பாஜகவின் ஹர்வார் துபேவுக்கான இரங்கல் குறிப்பை வாசித்தார். இடைப்பட்ட நாட்களில் உயிரிழந்த முன்னாள், இந்நாள் உறுப்பினர்களுக்கு மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து அவை பகல் 12 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் பகல் 12 மணிக்கு மாநிலங்களவை மீண்டும் கூடியது. அப்போது மணிப்பூர் நிலவரம் குறித்து அவையில் விதி 267- ன் கீழ் விவாதிப்பது தொடர்பாக உறுப்பினர்களுக்குள் எழுந்த முரண்பாடு காரணமாக அவை மீண்டும் மதியம் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

மதியம் 2 மணிக்கு மக்களவை மீண்டும் கூடியபோது, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் "மணிப்பூர்", "மணிப்பூர்", "மணிப்பூர் பற்றி எரிகிறது" என்று முழக்கங்கள் எழுப்பினர். இந்தக் கூச்சல்களுக்கு மத்தியில் பேசிய நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி, "நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் மணிப்பூர் குறித்து விவாதிக்க நாங்கள் தயாராக இருப்பதை ஏற்கெனவே தெளிவுபடுத்திவிட்டோம். மணிப்பூர் ஒரு தீவிரமான விவகாரம். அது குறித்து விவாததம் நடக்கும்போது உள்துறை அமைச்சர் விரிவாக விளக்கமளிப்பார். விவாதம் எப்போது நடக்கவேண்டும் என்று சபாநாயகர் முடிவு செய்வார்" என்றார்.



என்றாலும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இடைவிடாமல் முழக்கங்கள் எழுப்பியதைத் தொடர்ந்து சபாநாயகர் இருக்கையில் அமர்ந்திருந்த கிரிட் சோலங்கி, அவையை நாள் முழுவதும் ஒத்திவைத்தார்.

அதேபோல் மாநிலங்களவையிலும் மணிப்பூர் விவாகரம் குறித்து விவாதிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து முழக்கம் எழுப்பியதைத் தொடர்ந்து அவைத் தலைவர் ஜெக்தீப் சிங் தன்கர், அவையை நாள் முழுவதும் ஒத்திவைத்தார்.

மாநிலங்களவை எதிர்க்கட்சிகளின் தலைவர் மல்லிகார்கஜூன கார்கே அவையில் பேசுகையில், "மணிப்பூர் பற்றி எரிகிறது. பெண்கள் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு, நிர்வாணமாக்கி ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுகிறார்கள். பிரதமர் அமைதியாக இருக்கிறார். நாடாளுமன்றத்துக்கு வெளியே பேட்டி கொடுக்கிறார்" என்றார்.

முன்னதாக, மணிப்பூரில் இரண்டு மாதங்களுக்கு மேலாக கலவரம் நடந்து வரும் நிலையில், நேற்று வெளியான கொடூர சம்பவத்தின் வீடியோவுக்குப் பின்னர் முதல் முறையாக பிரதமர் மோடி பேசுகையில், "எனது இதயம் வலியால் நிரம்பியுள்ளது. இந்தச் சம்பவம் எந்த ஒரு நாகரிக சமூகத்துக்கான அவமானம். மணிப்பூரின் மகள்களுக்கு நடந்தது மன்னிக்க முடியாதது" என்று கண்டனம் தெரிவித்துள்ளார்.

மணிப்பூர் மாநிலத்தில் குகி பழங்குடியினத்தை சேர்ந்த இரண்டு பெண்களை மைதேயி சமூகத்தைச் சேர்ந்த ஆண்கள் கும்பல் ஒன்று சேர்ந்து நிர்வாணப்படுத்தி வீதியில் ஊர்வலமாக அழைத்து சென்ற கொடூரமான வீடியோ சமூக வலைதளங்களில் பகிரப்பட்டு தேசிய அளவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அந்த இரண்டு பெண்களில் ஒருவர் கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கும் ஆளாகியுள்ளார். இந்த விவாகரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் இன்று (ஜூலை 20) தொடங்கி ஆகஸ்ட் 11-ம் தேதி வரை 23 நாட்கள் நடைபெறுகிறது. மொத்தம் 17 அமர்வுகள் நடைபெற உள்ள இந்தக் கூட்டத்தொடரில், டெல்லி அவசர சட்ட மசோதா, தபால்சேவைகள் மசோதா, பழங்கால நினைவுச் சின்னங்கள் திருத்த மசோதா, சர்வதேச நிதியம் மற்றும் வங்கி மசோதா,தேசிய பல் ஆணைய மசோதா, பிறப்பு- இறப்பு பதிவு திருத்த மசோதா உட்பட 21 மசோதாக்கள் அறிமுகம் செய்யப்பட உள்ளன. ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ள வனப் பாதுகாப்பு திருத்த மசோதா, உயிரியல் மாறுபாடு திருத்த மசோதா உள்ளிட்ட மசோதாக்களும் இந்த கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட உள்ளன.

## அறந்தாங்கி அருகே எல்ஸடாய் கல்வி நிறுவனத்தில்

# உலக செஸ்தினத்தை முன்னிட்டு செஸ் போட்டிகள் நடைபெறவுள்ளது




அறந்தாங்கி, ஜூலை.21-

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அடுத்த ரெத்தினகோட்டையில் எல்ஸடாய் கல்வி நிறுவனம் இயங்கி வருகிறது. உலக செஸ்தினம் கொண்டாடப்பட உள்ள நிலையில் எல்ஸடாய் நிறுவனத்தின் சார்பாக அறந்தாங்கியை சுற்றியுள்ள அரசு மற்றும் தனியார் குழந்தைகளின் கல்வி மற்றும் தனித்திறமைகளை வெளிக்கொண்டு வரும் விதமாக செஸ் போட்டிகள் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் அறந்தாங்கி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள சுமார் 50-க்கும் மேற்பட்ட தனியார் மற்றும் அரசு பள்ளிகளில் செஸ் விளையாடும் மாணவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் பள்ளியின் அழைப்பினை ஏற்று அறந்தாங்கி சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் இருந்து சுமார் 100-க்கும் மேற்பட்ட மாணவ,மாணவிகள் கலந்து கொண்டனர்.

முன்னதாக நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளர்களாக அறந்தாங்க சுற்று வட்டார பகுதி அரசியல் பிரமுகர்கள், கல்வியாளர்கள், விளையாட்டு ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். சிறப்பு விருந்தினர்கள் அனைவருக்கும் எல்ஸடாய் கல்வி குழுமத்தின் நிர்வாக இயக்குனர் எல்ஜின் ஆரோஸ் சார்பாக சால்வைகள் போர்த்தி உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது, தொடர்ந்து செஸ் போட்டியானதை ஆரம்பிப்பதற்கு முன்னதாக விருந்தினர்கள் மற்றும் எல்சடை கல்வி குழுமத்தின் நிர்வாக இயக்குனர்களால் குத்து விளக்கு ஏற்றி வைக்கப்பட்டது.

விளையாட்டு போட்டியில் கலந்து கொள்ள வருகை தந்த குழந்தைகளுக்கு சிறப்பு விருந்தினர்கள் கை குலுக்கி தங்களது வாழ்த்துக்களை தெரிவித்தனர். போட்டிதொடங்கிய பிறகு எல்ஸடாய் கல்வி குழுமத்தின் தலைவர் எல்ஜின் ஆரோஸ் தெரிவிக்கையில் இதுபோன்ற குழந்தைகளுக்கான கல்வி மற்றும் தனித்திறமைகளை கொண்டு வருவதற்க்கான முயற்சியாக இந்த செஸ் போட்டி நடத்தப்படுவதாகவும், அதன் அடிப்படையில் அறந்தாங்கி மற்றும் சுற்றுவட்டார பகுதியில் இருந்து தனியார் மற்றும் அரசு பள்ளிகளில் மாணவர்கள் சுமார் 400-க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டுள்ளனர் என்றும், போட்டியின் இறுதியில் வெற்றி பெறும் மாணவ,மாணவிகளுக்கு ரூபாய் 40.000 மதிப்பிலான ரொக்க பணம் பரிசாகவும், கப்புகளும் கேடயங்களும் வழங்கப்படும் என்று தெரிவித்தார்..

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# மணிப்பூர் வீடியோ: நாடாளுமன்ற இரு அவைகளும் ஒத்திவைப்பு

# விபத்தை பார்வையிட்டவர்கள் மீது ஜாகுவார் மோதி 9 பேர் பரிதாபமாக பலி









# ஆயிரம் ரூபாயை பெற ஆயிரம் கண்டிஷன் புதுக்கோட்டையில் விஜயபாஸ்கர் சாபம்

சென்னை / புதுக்கோட்டை | 21.07.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை

வரலாறு

நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

சந்து போர்டே , இந்தியத் துடுப்பாளர் (பி.1934)



சங்கர்சிங் வகேலா , இந்திய, குஜராத் அரசியல்வாதி (பி.1940)



சேட்டன் சவ்ஹான் , இந்தியத் துடுப்பாளர் (பி.1947)



## இன்றைய நினைவு நாள்

வேதநாயகம் பிள்ளை , தமிழக எழுத்தாளர் (பி.1826) (இ.1889)



டி. வி. இராமசுப்பையர் , தமிழக ஊடகவியலாளர், தினமலர் நிறுவனர் (பி.1908) (இ.1984)



சிவாஜி கணேசன் , தமிழ்த் திரைப்பட நடிகர் (பி.1927) (இ.2001)



சு. ஜெயலட்சுமி , தமிழ்த் திரைப்பட நடிகை (பி.1920) (இ.2007)

